271

# தமிழ்நாடு அரசு

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
## தஞ்சாவூர் மாவட்டம்.

## கல்விராயன்பேட்டை ஊராட்சி

## மனைப்பிரிவு வரைபடம் ம.வ./ந.ஊ.உ.இ.(த.மா)எண்.53/2020

ந.க.எண்: 2274/2019தமா2 நாள்.03.12.2020

### மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. 1) மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ. /ந.ஊ.உ.இ. (த.மா.) எண். 53/2020 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி, எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் அமையும் தெருக்கள் அனைத்தும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 175 முதல் 179 வரையிலானவற்றின் பிரிவுகளின்படியும் 300 (8) பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்ட உபவிதிகளின் படியும் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கேற்ப சரளைக்கற்களைக் கொண்டு ஊராட்சி மன்றத்தலைவர், கல்விராயன்பேட்டை ஊராட்சி அவர்களால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் மனுதாரரால் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

2) அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி, தெரு விளக்கு ஆகிய வசதிகளை ஊராட்சி மன்றத் தலைவரின் கருத்திற்கொப்ப மனுதாரர் அமைத்துத் தர வேண்டும்.

3) நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிகப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள் மற்றும் அளவுகள், பொது ஒதுக்கீடுகளின் அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

4) அங்கீகரிக்கப்பட்ட இம்மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / உரிமையாளர் முறையாக அமைத்து அல்லது அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி கல்விராயன்பேட்டை ஊராட்சிக்கு உரிய படிவத்தில் பதிவு செய்து பொதுச்சாலையாக பராமரிக்க ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களுக்கு தானமாக ஒப்படைக்க வேண்டும்.

மேலும், உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்-பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (**Splay**) அமைக்கப்பட வேண்டும்.

..2..

For SNTS PROPERTIES

MANAGING PARTNER

# நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம், அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:- திரு.ரா.நாகேஸ்வரன்,பி.இ.,

நடவடிக்கை கடிதம் எண்: 2274/2019தமா2 நாள்: .03.12.2020

ஐயா,

பொருள்: மனைப்பிரிவு – தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - தஞ்சாவூர் மாவட்டம், வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், கல்விராயன்பேட்டை ஊராட்சி மற்றும் கிராமம், நி.அ.எண்கள்.247/2A,2B,3,4,5,6,8A,8B,9,10, 259/6A,6B,7,8A,9,10-ல் அமைந்துள்ள 428194.80 ச.அடி பரப்பளவுள்ள இடத்தில் உத்தேசித்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது – தொடர்பாக.

பார்வை: 1 மனுதாரர் திரு.G.K. செந்தில்ராஜன் த/பெ. குணசேகர் அவர்களின் விண்ணப்பம் நாள். 28.09.2019 மற்றும் 02.12.2020

2. வட்டார வளர்ச்சி அலுவலர், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண்.1908/2017/ஆ2 நாள்.29.09.2019 மற்றும் ந.க.எண்.2954/2020/அ3 நாள்.23.11.2020

3.அரசாணை எண்.71 ஊரக வளர்ச்சி (சி2) துறை நாள்.16.08.2003.

4.இவ்வலுவலக கடிதம் இதே எண். 11.10.2019 மற்றும் 01.12.2020

5.நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012 எல்ஏ2 நாள்.19.4.2012 மற்றும் 24.5.2012

6. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019 நஊ2 நாள்.14.10.2019

7.அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.4.2.2019.

8.அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017

9. வேளாண்மை இணை இயக்குனர், தஞ்சாவூர் அவர்களின் கடித எண். ஈ1/11800/2019 நாள்.10.10.2019

உத்தரவு:-

பொருளில் கண்ட இடத்தில் உத்தேசித்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரிய பார்வை-1-ல் மனுதாரரின் விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் யாவும் பார்வை-2-ல் கண்ட வட்டார வளர்ச்சி அலுவலர், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம் கடிதத்துடன் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் இத்துறையின் தொழில்நுட்ப ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை:-

**1.This Order is passed subject to the outcome of the writ petition WP(MD) No.8948 of 2019"**

..2..

For SNTS PROPERTIES

MANAGING PARTNER

275

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகள் குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்-களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

5. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பரிவில் அமையும் 10.00 மீட்டர் வரையிலான சாலைகளுக்கு 1.50 மீட்டர் விடப்பட வேண்டும்.

6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7. கடைக்கால் (**Foundation**) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி எடுத்துப் பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்தலோ கூடாது.

8. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல்தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.0 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் இருபுறமும் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்கும் அமைக்கப்பட வேண்டும்.

9. மனுதாரர் மனைப்பிரிவிற்கு ஊராட்சி மன்றத்தலைவர், கல்விராயன்பேட்டை ஊராட்சி அவர்களிடமிருந்து இறுதி ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டத்திற்கும் உள்ளாட்சிலிருந்து கட்டிட அனுமதி பெற வேண்டும்.

10. பூங்கா, உள்ளாட்சிக்கான பொது உபயோக திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை உள்ளாட்சி அலுவலகத்தில் உட்பிரிவு செய்ய ஏதுவாக பதிவு செய்யப்பட்ட தானபத்திரம் மூலம் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்க வேண்டும்.

11. மனையின் ஊடே குறைந்த அழுத்த மற்றும் உயர் அழுத்த மின்கம்பி பாதை / தொலைபேசி கம்பிப் பாதை அமைவதால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறு மனுதாரர் தமது சொந்த செலவில் மாற்றி அமைக்க வேண்டும்.

For SNTS PROPERTIES

MANAGING PARTNER

12. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக ஊராட்சி மன்றத்தலைவர், கல்விராயன்பேட்டை ஊராட்சி அவர்களிடம் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகள் தொடர்புடைய சார்பதிவாளர்

பார்வை 8-இல் கண்ட அரசாணை விதி எண்:9-ல் நகர் ஊரமைப்பு இயக்குநரிடமிருந்து செய்யக் கருதியுள்ள மேம்பாடு குறித்து முன் அனுமதி பெறப்பட்டவுடன் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச்சட்டம் (மத்திய சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47-ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்யணம் செய்து அதனை வசூலித்து அரசு கணக்கு தலைப்பின் கீழ் வரவு வைத்து செய்யக் கருதியுள்ள மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ள உரிய அனுமதியளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து மேற்படி தொகையினை பெற்றுக்கொண்டு அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**Land Use Conversion Charges:**

**0217 – Urban Development – 60 Other Urban Development Schemes – 800 other receipts - AS Receipts under Land Use conversion charges - 27 Non-Taxation fees - 09 collections.**
**DPC:0217 60 800 AS 2790.**

தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் இக்குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ந.ஊ.உ.இ.(த.மா)எண்: **53/2020** என எண்ணிடப்பட்டு மூன்று வரைபட நகல்கள் இத்துடன் உரிய நடவடிக்கைக்காக ஊராட்சி மன்றத்தலைவர், கல்விராயன்பேட்டை ஊராட்சி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மனைப்பிரிவு நிபந்தனை எண்.13 (ஆ) மற்றும் 19 குறித்து உறுதி செய்துகொண்ட பின்னரே உள்ளாட்சி மன்றத்தின் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்

உள்ளாட்சி மன்ற ஒப்புதலுக்கு பின்னரே மனைப்பிரிவு அமுலுக்கு வரும். எனவே, மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக ஊராட்சி மன்றத்தலைவர், கல்விராயன்பேட்டை ஊராட்சி அவர்களை தொடர்பு கொண்டு இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

3/12/2020

For SNTS PROPERTIES
MANAGING PARTNER

இணைப்பு:-
மூன்று வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள்.
பெறுனர்:-
ஊராட்சி மன்றத்தலைவர்,
கல்விராயன்பேட்டை ஊராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.
நகல்:

திரு.G.K . செந்தில்ராஜன்
த/பெ. குணசேகர்,
எண்.1, ஜீவநதிசன்ஸ்கர், விருபக்ஷபுரா,
கொடிகேஹள்ளி,
பெங்களூர் - 560097

2.தொழில்நுட்ப வைப்பறை

அலுவலக முகவரி:

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தஞ்சாவூர் மாவட்டம்,
எண்.A2, அருளானந்த நகர் 7வது தெரு,
தஞ்சாவூர் - 613 007.
மின்அஞ்சல்:-ddtjrregion@gmail.com
தொலைபேசி எண்.04362 270133

அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுதான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

13. அ) மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில்நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ) மேற்படி மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும்.

14. மனுதாரர் ஊராட்சி மன்றத்தலைவர், கல்விராயன்பேட்டை ஊராட்சி அவர்களிடம் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு அமையும் இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும், நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும், எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

15. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகின்றது .

16. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட பத்திர பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்பி வைக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துணை இயக்குனரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

**17. The Tamil nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated.22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promotor has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.**

18. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைநாள்.4.2.2019-ன் படியான தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகளின்படி மனைப்பிரிவில் அமையும் மனைகளுக்கு கட்டிட அனுமதி வழங்கப்பட வேண்டும்.

For SNTS PROPERTIES

MANAGING PARTNER

19. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

20. இம்மனைப்பிரிவில் உள்ள மனை எண்கள்.95-107, 110-122, 124-134 மற்றும் 137-147 ஆகிய 48 மனைகளை ஒருங்கிணைப்பு செய்யக் கூடாது.

| அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம் | பரப்பளவு | | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 9.83 ஏக்கர் (அல்லது) 428194.80 சதுர அடி | | -- |
| ஒதுக்கிய மனைகள் (Regular) | 156 | | -- |
| ஒதுக்கிய மனைகள் (EWS) | 48 | | |
| Total | 204 | | |
| பொது ஒதுக்கீடு உள்ளாட்சிக்கு | | | |
| பொது உபயோகம் | 1500.00 ச.அடி | | 0.54% |
| பூங்கா-1 | 21733.00 ச.அடி | 28448.00 ச.அடி | 10.03% |
| பூங்கா-2 | 6715.00 ச.அடி | | |
| மின்வாரியத்திற்கு பொது உபயோகம் | 1514.00 ச.அடி | | 0.53% |

உதவி இயக்குனர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

3/12/2020

For SNTS PROPERTIES

MANAGING PARTNER

தக்காந்தர் ................................ ஒன்றியம்

....கீழ்ஸ்ரீராயன்பேட்டை ஊராட்சி மன்றம்

# தீர்மான நகல்

கூட்ட எண் ① தேதி 10/1/2021

கீழ்ஸ்ரீராயன் ஊராட்சி மன்றத்தின் 1 - ஆம் வருகூட்டம் 2021 வருடம் ஜனவரி மாதம் 12 ஆம் நாள் செவ்வாய் கிழமை காலை / மாலை 10.00 மணிக்கு ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் திரு / திருமதி M. ராஜசேகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைவர் மற்றும் 6 வார்டு உறுப்பினர்கள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

| பொருள் 3 | தீர்மானம் 3 |
|---|---|
| தக்காந்தர் ஊராட்சி ஒன்றியம் கீழ்ஸ்ரீராயன்பேட்டை ஊராட்சியில் புல எண்கள் 247/2A, 2B, 3, 4, 5, 6, 8A, 8B, 7, 10 259 / 6A, 6B 7, 8A, 9, 10-ல் உள்ள அமைந்துள்ள WD கட்டளையில் மனைப்பிரிவில் உள்ள 204 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு துறையின் (DTCP) மூலம் [illegible] எண்: 53/2020 ன்படி அங்கீகாரம் பெற்று பொது ஒதுக்கீடு புல எண்களில் அமைந்துள்ள 204 மனைகளுக்கு ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் 3/12.1.2021 அன்று சிறுபணி அனைத்து அங்கீகரிக்கப்பட்டது | தீர்மானிக்கப்பட்டது |
| | ம. ராஜசேகரன் |
| | கையொப்பம் / [illegible] |

For SNTS PROPERTIES

MANAGING PARTNER